**ஆக்கரபதன பிரதேச சபை - 2023**

**---------------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆக்கரபதன பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆக்கரபதன பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்றங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ) (IV) மற்றும் (உ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் பொழிப்பறிக்கையின் 1.2.2 ஆம் பந்தியின் (அ),(ஆ),(ஈ),(உ),(ஐ), மற்றும் (ஓ) அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களில் அலுவலக உபகரணங்கள் ரூபா 299,700 மற்றும் தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் ரூபா 16,900 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன. | சரியான பெறுமதியை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பொது வைப்புக் கணக்கில் ஆரம்ப மீதிகளில் தவறு இல்லாதிருக்கையில் ஆரம்ப மீதியை சரிசெய்வதாக குறிப்பிட்டு 11 நாட்குறிப்பு பதிவகள் ரூபா 37,575 தொகை பொது வைப்புக் கணக்கு வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியத்திற்கு தவறுடன் செலவு வைக்கப்பட்டிருந்தது. | கூட்டும் போது ஏற்படட தவறொன்று காரணமாக கூடுதலாக காண்பித்த காரணத்தினால் அம்மீதியை சரிசெய்வதாக | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் அறிவித்தல் பதாதை வருமானம் ரூபா 1,006,675 குறைத்தும் இருப்பு மீதி ரூபா 29,750 கூடுதலாகவும் காண்பிக்கப் பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (ஈ) | முடுக்கு சங்கார வீடு நிர்மாணிக்கப்பட்டிருந்த காணிப் | வீடு தொடர்பாக எம்மிடம் எந்தவொரு ஆவணமும் | சொத்துக்கள் சரியாக இணங்காணப்பட்டு |

| | | |
|---|---|---|
| பகுதி குடியிருப்பாளருக்கு முழுமையான உறுதியுடன் கையளிக்கப்பட்டிருந்த போதும் குறித்த ரூபா 1,800,000 ஆன காணிப்பகுதி தவறுதலாக காண்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | இல்லாமையால் குறைபாடு இடம் பெற்றுள்ளதை ஏற்றுக் கொள்வதாக | கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் 04 நிலையான சொத்து விடயங்களுக்குரிய மீதிகள் உரிய பயன்பாட்டு ஆவணங்களின் மீதிகளுடன் ஒப்பிடும் போது மொத்தம் ரூபா 1,091,578 ஆன வேறுபாடு காணப்பட்டது. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீர் செய்யப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்
**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) சட்டம்<br>1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் சுற்றுலா சபையின் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறை கேந்திரத்தின் வருடாந்த வருமானத்தில் 01 சதவீதம் அறவிடப்படாமல் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | இவ்வாண்டு முதல் குறித்த நிறுவனத்திடமிருந்து சரியாக கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் | | | |
| நி.பி 571(3) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காலம் கடந்த 3 ஆண்டுகள் முதல் 5 ஆண்டுகள் வரையான காலமொன்று தீர்வு செய்யாத மொத்தம் ரூபா 711,132 ஆன 27 பொது வைப்பு மீதிகள் விடுவிக்கப்பட்டிருக்க வில்லை | ஒப்பந்த நிறுத்தி வைத்தலாக பொது வைப்பினுள் காணப்படும் பணத்தை தீர்வு செய்வதற்காக எமது நிறுவனத்துடன் போதியளவு நிதிஏற்பாடு இல்லையென | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 ஆம் இலக்க சுற்றறிக்கை | வீதவரி ஆதனங்கள் மதிப்பீடு 5 ஆண்டு களுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யாமல் 2008 ஆம் ஆண்டின் போது மேற்கொண்ட மதிப்பீட்டினை அடிப்படையாக கொண்டு வீதவரி அறவிடப்பட்டிருந்தது | குறித்த மதிப்பீட்டுக்காக நடவடிக்கை எடுக்கப்பட வில்லையென | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**02. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,305,376 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,211,805 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2023 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2022 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,576,584 | 3,628,080 | 3,379,480 | 2,338,098 | 1,959,000 | 2,916,056 | 2,755,710 | 2,089,498 |
| (ii) | வாடகை | 2,545,800 | 2,000,606 | 1,295,500 | 975,481 | 94,800 | 4,356 | | 24,125 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,830,000 | 1,694,500 | 1,694,500 | - | 2,610,000 | 1,447,000 | 1,447,000 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 64,739,712 | 4,135,820 | 2,897,847 | 2,328,221 | 56,170,050 | 2,373,333 | 3,552,433 | 1,090,248 |
| | | 71,692,096 | 11,459,006 | 9,267,327 | 5,641,800 | 60,833,850 | 6,740,745 | 7,755,143 | 3,203,871 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட வீத வரி நிலுவையில் 62 சதவீதம் மற்றும் 59 சதவீதம் அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 522,462 தொகை அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறே ஏக்கர் வரி மற்றும் காணி வரி அறவீடு 54 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. ஆண்டில் திரட்டிய பட்டியல்களில் அறவீடு 55 மாத்திரமாக இருந்ததால் வருமான அறவீட்டின் முன்னேற்றம் போதிய மட்டத்தில் இருக்கவில்லை. | வருமான அறவீடு சுகாதார ஊழியர் மேற்பார்வை உத்தியோகத்தரொருவரால் அறவீடு மேற்கொள்ளப்படுவதுடன் அவரால் அனைத்து நகர்களையும் மேவுகை செய்யும் வகையில் வருமான அறவீடு மேற்கொள்ளப்படுவதுடன் வருமான அதனால் தாமதிப்பதாக | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ) ஏனைய வருமானம்** | | |
| முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் சபை அதிகாரப் பிரதேசத்தில் 83 நிறுவனங்களிலிருந்து ரூபா 2,156,900 மீளாய்வாண்டின் இறுதி இறுதித் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தின் போது வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் | | |
| | மாகாண சபையின் பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரி களிடமிருந்தும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 2,328,221 ஆக இருந்தது. . | உரிய கட்டணங்கள் இதுவரை நிறுவகத்திற்கு கிடைக்கவில்லையென | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 78(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்காமல் சபைக்குச் சொந்தமான 07 நீர் மூலாதாரங்களில் 474 பாவனையாளர்களுக்கு பொருத்தமற்ற குடிநீர் விநியோகிக்கப்பட்டிருந்து. | நீர் உரிய தரம் இல்லாமையால் நீர் சுத்திகரிப்பு அலகிற்காக உதவி கோருவதற்கு எதிர்பார்ப்பதாக | சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 79,84,85,92,93 மற்றும் 95 ஆம் பிரிவுகளுக்கு இணங்க பொதுக் வாடிகாண்கள் கழிவு நீர் காண்கள், நீர் வழிகள், மலசலகூடங்கள் போன்ற செயற்பாடுகளுக்குரிய நிர்மாண பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் அவற்றை பாதுகாப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எதுவும் நிறை வேற்றப்பட்டு இருக்கவில்லை. | உள்ளூராட்சி மன்ற நிதி ஏற்பாடு கோரி எதிர்காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 93 முதல் 95 வரையான பிரிவுகளின் மல அகற்றலுக்காகவும் போக்கு வரத்திற்காகவும் தேவையான நடைமுறையொன்று எடுக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த | உள்ளூராட்சி மன்ற நிதி ஏற்பாடு கோரி எதிர்காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | போதும் மல அகற்றலுக்காக தேவையான நடைமுறையொன்று மீளாய்வாண்டிலும் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் III ஆம் பகுதியின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில ஒழுங்கைகளை அமைத்தல், மேம்படுத்துதல், வீதிகளுக்கு பெயரிடல் தனியார் ஆதன உரிமையாளர்களின் நலனுக்காக வீதி நிர்மாணம், சபைக்குச் சொந்தமான வீதிகளை வர்த்தமானியில் வெளியிடுதல் போன்ற செயற்பாடுகள் மீளாய்வாண்டில் சபை நிதியத்திலிருந்து நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி மன்ற நிதி ஏற்பாடு கோரி எதிர்காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஊ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 119 இன் பிரகாரம் குடியிருப்பாளர் களின் தேவைப்பாட்டிற்காக பொது வியாபார சந்தைகள் அல்லது வாரச் சந்தைகள் என்பவற்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | உள்ளூராட்சி மன்ற நிதி ஏற்பாடு கோரி எதிர்காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் தோட்ட வீடமைப்பு மற்றும் சமூகநல உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் நிதி ஏற்பாட்டின் பேரில் மன்ராசி நகரில் பயணிகள் மேவுகை யொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 500,000 ஆன மதிப்பீடொன்று அடிப்படையில் ஒப்பந்த நிறுவனமொன்றுக்கு நிர்மாணம் கையளிக்கப் பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரால் அங்கீ கரிக்கப்பட்ட திட்டத்திற்கு முரணாக நடவடிக்கை எடுத்து குறுக்கு வீதிகள் மற்றும் புதிய பாலங்களை நிர்மாணிப்பதற்காக புயன்படுத்தப்பட்டிருந்த தற்காலிக பாலத்தை இடையூறு செய்து 6x10 மீற்றர் அளவிலான இரண்டு மாடிக் கட் டிடம் ஒன்றை அனுமதியின்றி நிர்மாணிக்கப் பட்டிருந்த போதும் இது தொடர்பில் எவ்வித நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | தற்போது நீதிமன்ற நடைமுறைகள் எடுத்துள்ளதாக | நிர்மாணங்களை நிறைவேற்றும் போது மதிப்பீட்டின் பிரகாரம் அதனை நிறைவேற்ற வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் போது சபை நிதியத்திலிருந்து நிறைவேற்றப் பட்டிருந்த ரூபா 2,689,941 ஆன 08 நிர்மாணங்கள் குறித்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டிருந்த போதும் நிர்மாணங்களுக்காக ரூபா 1,021,461 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிறுத்தி வைத்தல் பணத்தை பகுதி பகுதியாக கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பரீட்சித்து பார்த்து தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | புதிதாக கூட்டிணைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு வசதிகளை வழங்குவதற்காக 2019 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 1,902,345 ஆன மீதியொன்று மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளுக்கு பயன்படுத்தியிருக்கவில்லை. | போதியளவு இடவசதியுள்ள அலுவலக கட்டிடமொன்றை நிர்மாணித்த பின்னர் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வைப்புப் பணத்தை நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளுக்கு பயன்படுத்த வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட தளபாடங்கள் பொருத்திகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள 16 சொத்து உருப்படிகள், காணி மற்றும் கட்டிடங்கள் 05 மற்றும் 06 பொது மலசலகூடங்களின் பெறுமதி மற்றும் கை வண்டில் என்பவற்றை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய்பபட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை | பெறுமதி இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**3.3 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நாகசேன மற்றும் மெராயா பொது நூலகங்களில் காணப்பட்ட மொத்தம் ரூபா 1,202,013 ஆன தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் 40 அலகுகள் பயன்படுத்தாமல் 04 ஆண்டு காலமாக குறைப்பயன் பாட்டுடன் காணப்பட்டன. | நிறுவனத்தில் போதியளவு இடவசதிகள் இல்லாமை காரணமாக கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்களை பயன்படுத்துவதற்கு முடியாமல் விளைவற்று இருப்பதாக | உபகரணங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான வாகனமொன்று 2020 செப்தம்பர் 05 ஆம் திகதி விபத்திற்கு உட்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் திருத்தம் செய்யாமல் குறைப்பயன் பாட்டுடன் காணப்பட்டன. | நி.பி 104 (4) பரிசோதனை அறிக்கை உரிய குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக. | திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒவில்டன் காணி விற்பனையின் போது நுவரெலியா பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா 18,,677,700 ஆன 02 காணித் துண்டுகள் ஆகரபதன பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதன் உரித்து கையேற்கப் பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் தரப்பினருடன் கலந்துரையாடி எமக்கு கையளிக்கப்பட்டுள்ள காணி குறித்த பயன்பாட்டிற்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | காணியை சபைக்கு கையளிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபை பயன்படுத்துகின்ற 04 வாகனங்களின் உரித்தினை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கையேற்கப் பட்டிருக்கவில்லை | சபைக்கு சொந்தமான வாகனங்களின் உரித்தினை கையேற்பதற்காக MT-06 ‘ விண்ணப்பங்களுடன் கடிதங்கள் உரிய வாகனங்களை எமக்கு கையளித்த நிறுவனத்திற்கு அனுப்பிவைத்துள்ளதாக | உரித்தினை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நுவரெலியா பிரதேச சபையிலிருந்து ஆகரபதன பிரதேச சபைக்கு இணைக்கப்பட்ட 11 ஊழியர்கள், 06 ஆண்டுகள் மதல் 24 ஆண்டுகள் வரையான காலப்பகுதி கடந்திருந்த போதும் சேவையில் நிரந்தரமாக்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு ஊழியரினதும் பதவிகளில் நிரந்தரமாக்குவதற்கு எதிர்வரும் நடவடிக்கைககள் எடுக்கப்பட்டு செய்து வருவதாக | தேவையான பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 98 உடனாக இருந்த போதும் 17 பதவிகளில் 78 வெற்றிடங்கள் காணப்பட்டன. | உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு 2024 ஏப்ரல் 29 ஆந் திகதி மீண்டும் கடிதமொன்று அனுப்பி வைத்துள்ளதாக | வெற்றிடங்களை பூர்த்தி செய்யவேண்டும். |